# குழந்தைகளுக்கு பால் உணவு கூடுதலாக கிடைக்கும்

Registered as a Newspaper in Ceylon

** விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்:389

National Tamil Daily

மலர் 10
இதழ் 212
தேசிய தினசரி

கீலக வருஷம் ஆவணி 25 ஜூ ஆகி 16 செவ்வாய்க்கிழமை (10-9-68)

## அடுத்த மாதத்திலிருந்து புதிய திட்டம் அமுல்

கொழும்பு, திங்கள்

அடுத்தமாதம்முதல் குழந்தைகளுக்கான பால் உணவு கூடுதலாக வழங்கப்படவிருக்கிறது.

குழந்தைகள் பங்கீட்டுப் புத்தகம் ஒவ்வொன்றுக்கும் 2 ருத்தல் பால் மாவு இப்புதிய திட்டத்துக்கிணங்க அடுத்த மாதம் முதல் வழங்கப்படும். மாதம் முதல் 20 நாட்களுக்குள் இந்த மாவு வழங்கப்படும். மிகுதி பால் மாவு விருப்பமின்றி மாதத்தின் கடைசிப் பத்து தினங்களுக்குள் விரும்பிய எல்லோருக்கும் பால் மாவு வழங்கப்படும்.

இப்போது ஒவ்வொரு குழந்தைகள் பங்கீட்டுப் புத்தகங்களுக்கும் ஒரு ருத்தல் பால் மாவே வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது பால்மாவு பற்றாக்குறை நீங்கியுள்ளதாலேயே 2 ருத்தல் பால்மாவு வழங்குவதற்கு இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. மந்திரிசபை உபகுழு இன்று இது சம்பந்தமாக ஆராய்ந்து முடிவு எடுத்துக் கொண்டது.

### மாலைதீவு கப்பலிலிருந்து இறக்கப்பட்டனவாம்

# ரூ. மூன்றரை லட்சம் பொருள் சுங்கப் பகுதியிடம் சிக்கின

கொழும்பு, திங்கள்

மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொழும்புத்துறைமுகத்தில் வெளிநாட்டுக் கப்பலொன்றிலிருந்து லொறிமூலம் கடத்த முயற்சித்தபோது சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டது.

நேற்றிரவு இந்த வேட்டை நடத்தப்பட்டது.

மாலைதீவிலிருந்து வந்த கப்பலொன்றிலிருந்தே விலையுயர்ந்த ருண்ஸிஸ்டர்கள், ரேடியோ கிராம்கள், சவரபிளேடுகள், மின்சார கருவிகள், வாசனைத்திரவியங்கள் ஆகிய பொருட்களும் இறக்கப்பட்டு லொறி மூலமாக வெளியில் கடத்த முயற்சி செய்யப்பட்டபோது சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டது.

இது சம்பந்தமாக இப்பொருட்களுடன் லொறி சுங்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட கப்பல் கப்டனும் சிப்பந்திகளும் விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

### சிகிச்சை பெற

## அண்ணா நியூயார்க்கில் 2 மாதம் தங்குவார்

சென்னை, செப். 9

தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை சந்தோஷமாக இருப்பதாகவும் நேற்றிரவு நிம்மதியாகஅவர் உறங்கியதாகவும் சென்னை ஆஸ்பத்திரி அறிக்கையொன்று இன்று தெரிவித்தது.

நாளை சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்கா பயணமாகும் அண்ணா அங்கு நியூயோர்க்கில் 2 மாதங்கள் வரை தங்கியிருப்பார்.

அவருடைய பொறுப்புகளை பிரித்து மற்ற அமைச்சர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கான உத்தரவுகள் ஆஸ்பத்திரியில் அண்ணாவின் கையெழுத்துப் பெறப்பட்டு ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டன.

இன்று திரு. அண்ணாதுரையை தமிழரசுக்கழகக் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம், திரு. அனந்த நாராயணன், தி. மு. க. அமைச்சர்கள் சென்றுபார்த்தார்கள்.

அண்ணாதுரையின் உடல்நிலை வெகு விரைவில் குணமடையவேண்டுமென்று ஆசி கூறி எழுதப்பட்ட திரு. ராஜாஜியின் குறிப்பு அண்ணாவிடம் இன்று கையளிக்கப்பட்டது.

### வல்வெட்டி கொலை முயற்சி வழக்கு

## 1ம் எதிரிக்கு 2 வருட சிறை 2ம், 4ம் எதிரிகளுக்கு 6 மாதம் 3ம் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செப்

வல்வெட்டி கொலை முயற்சி வழக்கில் மூன்றும் எதிரி இன்று விடுதலை செய்யப்பட்டார். முதல் எதிரிக்கு இரண்டு வருடச் சிறைத்தண்டனையும் இரண்டாம் எதிரிக்கு ஆறுமாதச்சிறைத்தண்டனையும் 4-ம் எதிரிக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

வல்வெட்டி கொலை முயற்சி வழக்கு இன்று காலை வட பகுதி அசைஸ் நீதிமன்றத் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் திரு ஓ. எல். டி. கிரட்சர் தொகுப்புரை நிகழ்த்தினார். ஒன்றரைமணி நேரம் அவர் உரை நிகழ்த்திய பின் ஜூரிசபையினர் சுமார் ஒன்றரைமணி நேரம் மந்திராலோசனை செய்தனர். ஜூரிசபையினர் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து முதல் குற்றச்சாட்டுக்கு முதல் எதிரிக்கு இரண்டுவருடச் சிறைத் தண்டனையும் 4-து குற்றச்சாட்டுக்கு ஆறுமாத சிறைத் தண்டனையும் விதித்த நீதியரசர் இரண்டு தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

இரண்டாம் எதிரிக்கு 6 மாதமும் 4-ம் எதிரிக்கு 6 மாதமும் சிறைத்தண்டனை விதித்த நீதியரசர் 3-ம் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ந் திகதி வல்வெட்டியில் சி. தம்பிமுத்து, நா. நடராசா, பொ. பொன்னம்பலம், ஆ. பொன்னுத்துரை, த. செயராசா ஆகியோர் இராமலிங்கம் சின்னராசாவை கத்தியால் வெட்டிக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் இராமலிங்கம் செல்லமாணிக்கத்தை பொல்லால் தாக்கி கடும் காயம் விளைவித்ததாகவும் அதே நேரத்தில் இன்னொருத்தி இராமலிங்கத்தை கத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## ரூ.10 ஆயிரம் பொருட்கள் ரொக்கம் திருட்டு

வல்வெட்டித்துறை, திங்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றிலிருந்து பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளும், ரொக்கப் பணமும் இன்று களவாடப்பட்டுவிட்டனவாம்.

இது சம்பந்தமான புகாரொன்று வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ளது. கந்தையா செல்லையா என்பவருக்குச் சொந்தமான வீட்டில் இத்திருட்டு நடைபெற்றுள்ளது இத்திருட்டு சம்பந்தமாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவருகிறார்.

திருட்டுப்போன வீட்டில் [illegible] பொலிஸார் சோதனையிட்டனர்.

## "பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் வேண்டும்"

கொழும்பு, திங்கள்

விவசாயத்துக்கான செலவின நிதிஒதுக்கீடு விவாதத்தில் இன்று எதிர்க்கட்சியினரே முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர்.

திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா பேசுகையில், காசனப்பகுதியையும் விவசாய அமைச்சுக்குக்கீழ் கொண்டு வரவேண்டுமென்றார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசுகையில், ஏகாதிபத்திய பொருளாதார கொள்கையில் மாற்றம் இல்லாவிட்டால் பொருளாதாரத்துறையில் மாற்றம் ஏற்படமாட்டாதெனத் தெரிவித்தார்.

செலவின ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டது.

## சேலைகள் பிடிபட்டன

தலைஊர், திங்கள்

வல்வெட்டித்துறையில் இன்று சுமார் 3000 ரூபா பெறுமதியான 15 இந்தியச் சேலைகள் ஒரு வீட்டில் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

சுங்க கண்ட்டர் திரு. செல்வரத்தினம் இதைப்பற்றி விசாரணை செய்து வருகிறார்.

### ஐ. நா. கட்டடத்தின் முன்

## உடையேதுமின்றி ஆடினர்கள்

நியூயோர்க், செப். 7

ஐ. நா. தலைமைக் காரியாலயக்கட்டடத்தின் முன்னால் நான்கு யுவதிகளும் ஒரு இளைஞனும் உடைகளெதுவுமின்றி ஆடினார்கள்.

செக். நாட்டில் சோவியத் நடவடிக்கையை ஆட்சேபித்தே இவர்கள் இவ்விதம் நடனமாடினார்களாம். இந்த ஆட்டத்தின் பின் சோவியத் கொடியை எரித்தார்கள்.

தகவல் கிடைத்து பொலிஸார் ஸ்தலத்துக்கு வருவதற்குமுன் இவர்கள் கலைந்து சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நெற்காணிச் சட்டம் திருத்தப்படும்

கொழும்பு, திங்கள்

நெற்காணிச் சட்டம் விரைவில் திருத்தப்படவுள்ளது. இந்தத் தகவலை உணவு, விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா இன்று பார்லிமெண்டில் வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

பூமனை இல்லம், கருகம்பனை, காங்கேசன்துறையைச் சேர்ந்த டாக்டர் பூதப்பிள்ளை பொன்னம்பலத்திற்கு அளிக்கப்பட்ட ரூபா 500க்கான இல. 142, 143, 144, 145, 146 ஆகிய ஐந்து பங்குகளுக்குரிய பங்குப் பத்திரம் இல. 27 காணமற் போய்விட்டது என எமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதால் இந்த அறிவித்தல் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கிடையில் ஆட்சேபம் எதுவும் இக்காரியாலயத்தில் கிடைக்கப் பெறுமிடத்தில் இக்கம்பனி ஒரு பிரதிப் பங்குப் பத்திரத்தை அளிக்கும்.

மாக்ஸிலைவ் அசூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் 54, ஜும்மா பள்ளி ஒழுங்கை, 918 யாழ்ப்பாணம்.

**MANOHARA**
JAFFNA
Daily at
6-45, 7-00 & 9-45 p. m.
Stephen Boyd-Elke Sommer
in
**THE OSCAR**
(Color)

4-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
AVM.ராஜன் - புஷ்பலதா
நடித்த
**கற்பூரம்**

மனிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30 9-30
போயா தினங்களில் 2-30
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
**பூம்புகார்**

## குடிவகைபாவித்த நால்வரில் ஒருவர் மரணம்

காலி, திங்கள்

குடிவகை பாவித்த நால்வர் மயக்கமுற்ற நிலையில் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் ஒருவர் மரணமான சம்பவம் நேற்று நடைபெற்றது.

ஒரு பாலையிலிருந்த குடிவகையைப் பாவித்ததாகக் கூறப்படும் நால்வரில் ஒருவரான எஸ் தரைத்திரு என்பவரே மரணமானவராவார்.

கே. கே. பிரான்சிஸ் கே. கே பியதாசா, பி. ஜெயோடேச ஆகிய மூவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திரு. றெக்ஸ் விக்கிரமசிங்க மரண விசாரணை நடத்தினார். பாலையில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதாக பொலிசார் கருதுகின்றனர். கக்கலமுல்ல பொலிசார் இதுபற்றிய விசாரணையை நடாத்தி வருகின்றனர்.

## கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 5 வருடக்கடூழியம்

காலி, திங்கள்

கொலைமுயற்சி வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டவருக்குக் காலி அசைஸ் நீதிமன்றத்தில் 5 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

காலி அசைஸ் நீதிமன்றத்தின் நீதிபதி ஏ எல். எஸ். சிறிமன் இவ் விசாரணையை நடாத்தினார்.

இவ் வழக்கில் 1966-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி கொக்கல பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஏ. கொன்றட் செய்சா என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த கே. பி. பெரேரா என்பவரை கட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முன்னர் நடந்த எல்லாவற்றையும் மறந்து விடும்படியும் இப்பொழுது தேனீர் குடிப்போம் வாரும் என்று எதிரி கே. பி. பெரேராவைக் கேட்டதாகவும் இருவரும் ஒரு ரயில் தண்டவாளக் வழியாகப் போய்க் கொண்டிருந்த பொழுது எதிரி அவரைச் சுட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் திரு ஜி பி. டி. எஸ். டி. சில்வா ஆஜரானார். திரு கே. பி வி. ஜெயதிலகா எதிரி சார்பில் ஆஜரானார்.

76-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
**பணமா பாசமா**

## சலவைத் தொழிலாளர் அவதி

புன்னாலைக்கட்டுவன். திங்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கிராமப்புறங்களிலுள்ள கிணறுகளிலும், குளம், குட்டைகளிலும் நீர் இல்லாமையினால் இப்பகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் பல மைல் தூரம் சென்று உடைகளை சலவை செய்து திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## மின்சாரம் தாக்கியது

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையிலிருந்த சமயம் இன்று காலை மின்சாரத்தினால் தாக்குண்ட பெண் கங்காணி ஒருவர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள் வார்ட்டில் கடமையிலிருந்த ரூசம்மா என்ற கங்காணியே மின்சாரத்தினால் தாக்கப்பட்டவராவார்.

## ஒழுங்கை திருத்தப்படும்

புன்னாலைக்கட்டுவன், திங்.

சுரந்தன் வீதியுடன் சென்று இணையும் பிள்ளையார் கோவில் ஒழுங்கை விரைவில் திருத்தப்படவிருக்கிறது. இதற்கான நிலத்தை மக்கள் வழங்கியுள்ளனர். உரும்பிராய் பட்டினசபை இவ் வேலைகளுக்கு 6500 ரூபா ஒதுக்கியுள்ளது.

சந்நிதியில்

## களவுபோன பொருள் மூளாயில் மீட்பு

வல்வெட்டித்துறை, திங்

செல்வச்சந்நிதி கோவிலடியிலுள்ள கடையொன்றில் களவு போனதாகக் கூறப்படும் 3500 ரூபா பெறுமதியான தாலிக்கொடி, தங்கச் சங்கிலி, ரொக்கப்பணம் போன்றவற்றை மூளாயில் ஒரு வீட்டில் கைப்பற்றினர் பொலிசார்.

சந்நிதி கோவிலடியில் முனிஐயா என்பவரது கடையில் களவுபோனதாகக் கூறப்படும் பொருட்களைப் பொலிசார் கைப்பற்றியதுடன் இது சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் புத்தூரைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்தனர்.

இது சம்பந்தமான விசாரணையைப் பொலிசார் நடாத்துகின்றனர்.

## 1350 பேர்களில் 6பேர் பெண்கள்

பம்பலப்பிட்டி, திங்கள்

தந்தித்தொடர்பு சேவை இன்ஸ்பெக்டர் பயிற்சியாளர்களாக நியமனம் பெறுவதற்கு 1350 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் இவர்களில் 6பேர் பெண்களென்றும் தந்தித் தொடர்பு சேவைப்பகுதி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தந்தித்தொடர்பு சேவைப்பகுதியில் தொழில் நுட்பப் பதவிக்குப் பெண்கள் விண்ணப்பித்தது இதுவே முதல் தடவையென்றும், 35 இடங்கள் மட்டுமே காலியாயிருப்பதாயும் தெரிவிக்கப்பட்டது

## வீதி சீர்கேடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அரசடிவீதி மிகவும் சீர்கேடாக இருப்பதாகவும் இதை உடனடியாகத் திருத்துமாறும் சுந்தர்மடம் இளைஞர்மன்றத் தலைவர் திரு. எஸ். சண்முகராசா மாநகரசபை வேலைப்பகுதிக்கு ஒரு மகஜர் அனுப்பி வைத்துள்ளார். [ந. நி.]

## அராலி கி. ச. வாக்காளர் இடாப்பு

அராலி, திங்கள்

அராலிக் கிராமசபையின் 12ம்வட்டாரங்களின் வாக்காளர் இடாப்புகள் தயாராகி விட்டனவென்றும் இதுபற்றிய ஆட்சேபனைகள் இருப்பின் இம்மாதம் 19ந் திகதிக்குமுன் தேர்தல் அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிசம்பரில் யு. என். பி. மகாநாடு

கொழும்பு, திங்கள்

ஐக்கியதேசியக் கட்சியின் வருடாந்த மகாநாடு டிசம்பர் மாதம் நடைபெறும் என்று தெரிகின்றது. கொழும்புக்கு வெளியில் ஓர் இடத்திலேயே இந்த மகாநாடு நடைபெறும் என்று கூறப்பட்டபோதிலும் இடமும் திகதியும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

**வியாபாரம்பெருக**
**விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலையில் தேர்ச்சியும் அனுபவமுமிக்க பெண்கள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு 14-9-68க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். கபறி இண்டஸ்றீஸ், மைலண்ட்ஸ் மேல் மாடி, 119, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 89

மனேச்சர் தேவை. 25—45 வயதுக்குட்பட்டவராகவும், எஸ். எஸ் ஸியில் கணக்கியலிலும் தமிழிலும் விசேட சித்தி பெற்றிருப்பவராகவும் கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருப்பவராகவும் இருக்க வேண்டும். ரொக்கப் பிணைப் பணம் 1000/- ஆதனப் பிணை 2000/- சம்பளம் எல்லாம் உட்பட 100/- திறமைக்கேற்றபடி சம்பளம் ஏற்றம் உண்டு. 30-9-68க்கு முன் அ. கந்தையா, தலைவர், மாவிட்டபுரம் பலநோக்குக் கூட்டுறவு சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 91

### விற்பனைக்கு

காரைநகர்மேற்கிறைகுமிழங்குழியும், சகல வேலையும் நில பரப்பு 6 குழி 8 5/16 கிழக்கு கந்தப்பா சங்கரப்பிள்ளையின் ஆதனம் வடக்கு செல்லையா சின்னரித்தாவரின் ஆதனம். மேற்கு கனகசுந்தரம், சங்கரப்பிள்ளையின் ஆதனம். தெற்கு சங்கரப்பிள்ளைக்கும் கந்தப்புவுக்குமுரிய ஆதனங்கள். விரும்புவோர் 43, உடுவில் ரோட்டு, மானிப்பாயிலிருக்கும் தேசம்மா செல்லையாவோடு தொடர்பு கொள்ளவும். 93

காணி:

கிளிநொச்சி சந்தியில் 12 ஏக்கர் நெற்காணி விற்பனைக்கு. அரை மைல் தூரம் மோட்டார் வாகனத்தில் செல்லக் கூடிய ரோட்டு உண்டு. இரண்டாகவாய்க்காலில் சொகு வாய்ப்பான இடம். சொந்தக்காரர் சாகுபடிசெய்து நல்ல விளைச்சல் கிடைத்தது. தொடர்பு கொள்க: எஸ். கதிர்காமலிங்கம், பிரக்கிராசியும் நொத்தாரிசும், இல. 381, டாம் வீதி, கொழும்பு. 86

7-வது வெற்றி வாரம்
கிங்ஸ்லி—பிளாஸா
(கொழும்பு)
வெலிங்டன்—விஜயா
(யாழ்நகர்) (மட்டுநகர்)
ரவிச்சந்திரன்—ஜெயலலிதா
நாகேஷ்—மனோரமா
நடித்த
ஸ்ரீவிநாயகா பிக்சர்ஸ்
**நான்**



6-வது வெற்றி வாரம்
கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
**சங்கம்**

நாளை முதல்
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
நடித்த
**நான் ஆணையிட்டால்**

ஈழநாடு
**தினக்குறிப்பு 1969**
அழகிய கடதாசியில்
வழமைபோல்
சகல விபரங்களுடனும்
தயாராகிக்கொண்டிருக்கிறது.
விற்பனையாளர்கள் மனேஜருடன்
தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

## தெரிவுக் கோஷ்டியிடம் சாம்பியன் கோஷ்டி தோல்வி

உடுப்பிட்டி, திங்கள்
வடமராட்சிப் பாரிவாதி சார் பிரிவில் உதைபந்தாட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட வதிரி டைமன் விளையாட்டுக் கழகம் வடமராட்சி தெரிவுக் கோஷ்டியிடம் தோல்வியுற்றது.

சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி வதிரி டைமன் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கேடயம் வழங்கும் முகமாக நடாத்தப்பட்ட சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியிலேயே வதிரி கோஷ்டி தோல்வியுற்றது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் வடமராட்சித் தெரிவுக் கோஷ்டிக்கும் வதிரி டைமன் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற இம் மோதல் ஆரம்பமுதல் விறுவிறுப்பாக இருந்தது. தெரிவுக் கோஷ்டி 3—2 கோல்களால் சாம்பியனான டைமன் கழகத்தைத் தோற்கடித்தது.

கரவெட்டி டிஸ்கோவல் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஜோதிரவி, ரத்தினசிங்கம் ஸ்ரீதரன் வேதாபரன் ஆகியோர் தெரிவுக் கோஷ்டியில் நன்றாக விளையாடினர். இப் போட்டிக்கு திரு எஸ், கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## புதிய நிர்வாகிகள்

உருத்திரபுரம் திங்கள்
உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளையார் கோவில் திருப்பணிச்சபைக் கூட்டம் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் திரு. சா. சிவசம்பு, காரியதரிசி: திரு. கா. நாகலிங்கம், பொருளாளர்: திரு. சி. கந்தையா, உபதலைவர்: திரு. மு. அழகப்பர், உபகாரியதரிசி: திரு. நா. குணரத்தினம் திருவாளர்கள். வே. கணேசபிள்ளை, நா. சுப்பையா. இ. சண்முகராசா, ப. ஐயம்பிள்ளை, ப. சேதுபதி, க சின்னத்துரை, வ. மாணிக்கம் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாம்புக் கடி வைத்தியம் டாக்டர்கள் சாதனை

கொழும்பு, திங்கள்
பாம்புக்கடி வைத்தியர்கள் கைவிட்ட ஒரு நோயாளியைக் கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் வெற்றிகரமாக குணப்படுத்தியுள்ளார்கள்.

பாம்பினால் கடிக்கப்பட்ட ஒருவாலிபர் பாம்புக்கடி வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலையில் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பிழைக்கமாட்டார் என்று கருதப்பட்ட அந்நபரை டாக்டர்கள் குணப்படுத்தியுள்ளனர். நஞ்சு கலந்த இரத்தத்தை வெளியேற்றும் அதே நேரத்தில் நல்ல இரத்தத்தை உடலில் புகுத்தியதின் மூலம் இச்சாதனையானதென டாக்டர்கள் தெரிவித்தனர்.

"புங்குடுதீவில் குடிநீர் விஷயமாக

## நிபுணர்கள் சிபார்சை நிறைவேற்றுக"

### புங்குடுதீவு கி. ச. தலைவர் மகஜர்

ஊர்காவற்றுறை, திங்கள்
"புங்குடுதீவு மக்கள் குடிநீரால் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். ஆண்டுதோறும் அனுபவிக்கும் இக் கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் வசதி செய்து கொடுக்கவேண்டும். முடியாவிட்டால் புங்குடுதீவு மக்களை நீர் வசதியுள்ள இடத்தில் குடியேற்றவேண்டும்"

புங்குடுதீவுக் கிராமசபையின் புதிய தலைவரான திரு. கே. மதியாபரணம் மேற்கண்டவாறு கோரும் மகஜரொன்றை உள்ளூராட்சி மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட குடிநீர் விநியோகத்திற்கான திட்டம் ஒன்றையாவது உடனடியாக நிறைவேற்றவேண்டுமெனவும் திரு மதியாபரணம் கோரியுள்ளார்.

தற்போதைக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லும் இரு வாகனங்களைக் கொடுத்துதவினால் பரிபாலிக்கும் சேவையைப் புங்குடுதீவுக் கிராமசபை ஏற்றுக்கொள்ளுமெனவும் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

---

புன்னாலைக்கட்டுவன், திங்.
பாவற்குளம், மாமடு, சின்னக்குளம் பகுதிகளில் பெருமளவில் மலேரியா பரவியுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள கடும்வரட்சியினால் இப்பகுதி மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கரபந்தாட்டம்

## கேடயப் போட்டி 11-ம் திகதி

சங்கானை, திங்கள்
வவுனியா நீர்ப்பாசன இலாகா பொழுதுபோக்குக் கழகத்தால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் அமலவாணி கேடயத்திற்கான கரபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 11-ம் திகதி நீர்ப்பாசன இலாகா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்வருடம் போட்டிகளில் பன்னிரண்டு கோஷ்டிகள் பங்குபற்றின. இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. பி. சீ. பெரேரா கலந்துகொள்வார்.

அன்று நீர்ப்பாசன இலாகா விளையாட்டுக் கழகத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவும் நடைபெறும். இதற்கான பூர்வாங்கவேலைகளை விளையாட்டுக் காரியதரிசிகள் திரு வீ. வைரமுத்து திரு. க. சண்முகநாதன் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

## நீச்சல் தடாகம்

காங்கேசன்துறை, திங்கள்
வலி வடக்கு விளையாட்டுப் பகுதியில் காங்கேசன்துறை பிரிவில் ஓர் விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்காக காங்கேசன்துறைப் பட்டினசபை விளையாட்டு அமைச்சினிடம் கடனுதவி கோரியுள்ளது.


இவ் விளையாட்டு மைதானத்தின் அருகாமையில் நீச்சல் தடாகம் ஒன்றை அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது.

## பாலம் திருத்தப்பட்டது

சங்கானை, திங்கள்
கடந்த வருடம் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக சேதத்திற்குள்ளாகி வழுக்கையாறு சேரும் சங்கரத்தை, ஆனைக்கோட்டை வீதியில் அமைந்துள்ள மூன்று கண் பாலம் பொது வேலைப் பகுதியினரால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.


# டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை






சளிசுரத்துக்கு
காய்ச்சலுக்கு
வலிகளுக்கு

இதற்குக் காரணங்கள் பல...

இரத்தத்தில் விரைவாகச் செறியும் மருந்துகள் துரித நிவாரணம் தருவன. டிஸ்பிரின் விரைவாகக் கரைவது. அதனுல் இரத்தத்தில் விரைவாகச் செறிந்து துரித நிவாரணம் தருகிறது.

முற்றுயும் விரைவாயும் கரையும் டிஸ்பிரினில் மற்றுமொரு விசேஷ சிறப்புண்டு. அதையொத்த கரையாத மற்ற மருந்துகளைப் போல, டிஸ்பிரின் கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. அதனுல் தான் டிஸ்பிரின் பாவிப்பதற்கு மிகப் பாதுகாப்பானது.

சில மருந்துகளை உபயோகித்த பின் பாரதூரமான பாதகங்கள் ஏற்படுவதுண்டு. தலைவலி, காய்ச்சல் போன்றவைக்கு வழக்கமாகப் பாவிக்க, நீங்கள் நம்பக்கூடிய ஒரு மருந்தையே உபயோகிக்க வேண்டும்.

பல நாடுகளில், தொடர்ந்த பாவனையால், பாதுகாப்புக்கும் வன்மைக்கும் நம்பிக்கை பெற்றது டிஸ்பிரின். ஆகையால் நீங்களும் நம்பிக்கையுடன் அதை உட்கொள்ளலாம்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் வன்மையான, பாதுகாப்பான, துரித நிவாரணத்துக்கு, டிஸ்பிரின் சிறந்த மருந்தென அனுபவத்தில் கண்டு, அதை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறுர்கள்.

சளி சுரத்துக்கும் காய்ச்சலுக்கும் வலிகளுக்கும் அதி சிறந்த சிகிச்சை வேண்டுமானுல் டிஸ்பிரினையே நீங்கள் எப்போதும் பாவிக்க வேண்டும்!

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P-7489


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களின் வேலையில்லா திண்டாட்டத்துக்கு தமிழரே காரணமாம்

## ஆர். ஜி. யின் புள்ளி விபரக் கணக்கு

கொழும்பு, திங்கள்

"நாட்டில் இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்னையாக இருப்பதற்கும் சிங்கள மக்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதற்கும் தமிழர்கள் தான் முழுக்க முழுக்க காரணம்"

சிங்கள மகாஜனக்கட்சித் தலைவரும் தம்பதெனியா பிரதிநிதியுமான திரு. ஆர். ஜி. சேனநாயகாதான் இப்படிக் கூறியிருக்கிறார். அவரது புதிய கட்சியின் கிளையொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் திரு. ஆர். ஜி. சேனநாயகா மேலும் பின்வருமாறு குறிப்பிட்டார்!

இந்த நாட்டில் வாழும் மக்கள் தொகையில் தமிழர் பன்னிரண்டு சதவிகிதத்தினர்தான். பன்னிரண்டு சதவிகித தமிழர் அரசாங்க உத்தியோகத்தில் 60 சத விகிதத்தை தமதாக்கிக் கொண்டுள்ளனர். 337 ஏக்கர் நிலப்பரப்பான வெளிவளத்தைச் சிங்களவருக்கு 81 ஏக்கர் நிலம்தான் சொந்தம். சிங்களப் பிள்ளைகளுக்கு உயர் கல்வி கிடைக்கச் செய்துள்ளதாக கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல சமீபத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் இம்முறை பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 400 மாணவரில் 281 பேர் தமிழர்.

சிங்கள மக்களுக்கென உண்மையான ஒரு கட்சி இல்லாததால் தாம் சிங்கள மகா ஜனகட்சியைத் தொடக்கியதாகவும் அடுத்த தேர்தலில் எண்பது சதவிகித சிங்கள மக்களின் வாக்குகளில் முப்பது சதவிகிதவாக்குகள் கிடைத்தால் போதுமென்றும் திரு. ஆர். ஜி. கூறினார்.

# 3 தினங்களாக காணவில்லை

அளவெட்டி, திங்கள்

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை 3 தினங்களாகக் காணவில்லையாம். மீனவர்களைத் தேடுவதில் பத்து மோட்டார் வள்ளங்கள் ஈடுபட்டுள்ளன.

அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த த. வீரப்பிரகாசம், வளலாயைச்சேர்ந்த தேவசகாயம், நெடுந்தீவைச் சேர்ந்த இன்னுமொருவர் பலாலியைச் சேர்ந்த ஒருவரது வள்ளத்தில் மீன் பிடிக்கச் சென்றதாகவும் அவர்கள் 3 தினங்களாக வீடுதிரும்பவில்லையென்றும் கூறப்படுகிறது.

காணாமற்போனவர்களின் குடும்பங்கள் சோகத்திலாழ்ந்துள்ளன. தேடுதலில் ஈடுபட்டுள்ள கரையூர் வள்ளங்கள் இதுவரை எதுவித தகவலும் தரவில்லையாம்.

## நிபுணர்கள் கருத்து

காங்கேசன்துறை, திங்கள்

வடபகுதியில் உள்ள கிணறுகளில் உப்பு நீர் ஊறுவதாக காணி நீர்ப்பாசன அமைச்சைச் சேர்ந்த நிபுணர்கள் கருதுகின்றனர். தண்ணீர் இறைக்கும் இயந்திரமே இவ்வித மாற்றத்தைக்கொண்டுவருகிறதென கருதப்படுகிறது. ஒவ்வொரு கிராம சேவையாளர் பகுதியிலும் பல மாதிரிகளாக செய்த ஆராய்ச்சியின் பின்னர் இது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம்.

தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதில் இனிமேல் கூடிய கவனமெடுக்க அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும், உப்புத்தண்ணீர் கூடுதலாக ஊறும் இடங்களில் இவ்வித இயந்திரங்களை பாவிக்கக் கூடாதென்பதற்காகவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறியப் படுகிறது.

## பம்பாய் வெங்காய தட்டுப்பாட்டை யாழ்ப்பாணம் நீக்கும்

கொழும்பு, திங்கள்

தூத்துக்குடியில் படகுக்காரர் வேலை நிறுத்தம் மேற்கொண்டிருப்பதால் இலங்கைக்கு வரவேண்டிய பல பொருட்கள் தடைப்பட்டதாகத் தெரிகிறது.

இலங்கைக்கு வரவிருந்த ஏராளமான பம்பாய் வெங்காயம் தூத்துக்குடி துறைமுகத்திலேயே முடங்கிவிட்டதாம். இதனை ஏற்பட விருந்த தட்டுப்பாட்டை யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் சின்ன வெங்காயத்தின் மூலம் சமாளித்துவிடமுடியும் என்று அரசாங்க அறிக்கைகள் கூறின. தற்போது ஏராளமான சின்னவெங்காயம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து குவிந்து கொண்டிருக்கிறது.

## ஆர்.ஜி.க்கு பிரதமர் அபயம்

கொழும்பு, திங்கள்

"திருக்கோணமலை பிரடரிக் கோட்டையை மீண்டும் கைவிடுவதென்ற பேச்சுக்கே இடமில்லை" என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா நேற்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைச்சின் செலவினங்கள் பரிசீலனை செய்யப்பட்டபோது கோணேசராலயம் அமைந்துள்ள பிரடரிக்கோட்டைப்பகுதியை புனிதஸ்தலமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை பற்றி தம்பதெனியாப் பிரதிநிதி திரு. ஆர். ஜி. சேனநாயகா குறிப்பிட்டு, புனிதஸ்தலமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை கோட்டையைக் கைப்பற்றுவதற்கு தமிழர் செய்யும் சதித்திட்டம் என்று கூறி கோட்டையை கைவிட்டுவிடக் கூடாதென்றார்.

இச்சமயத்தில் தான் பிரதமர் குறுக்கிட்டு "கோட்டையை கைவிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று கூறிவிட்டார். "கோட்டையைவிட்டு விடுவோம் என்று தம்பதெனியாப் பிரதிநிதி அஞ்சவேண்டியதில்லை" என்றும் பிரதமர் சொன்னார்.

புனிதநகரங்கள் பிரகடனம் செய்யப்படுவதில் மிக்க கவனமாக இருக்க வேண்டுமென்றும் இப்பொழுது புனித நகரங்கள் பிரகடனம் செய்யப்படும் வேகத்தைப் பார்த்தால் புனித இடங்களல்லாத இடமே மிஞ்சாது போலிருக்கிறதென்றும் பிரதமர் கூறினார்.

## பெண் நியமனம்

நல்லூர், திங்கள்

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முதல் முதலாக உதவிப்பெண் மேற்பார்வையாளர் ஒருவரை அரசாங்கம் நியமிக்க இருக்கிறது. பின்னர் படிப்படியாகத் தாதிமாரும் நியமிக்கப்படுவரென நம்பப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக சங்கானை ஆஸ்பத்திரிக்கு தாதிமாரை நியமிக்க வேண்டுமென்று சங்கானை மக்கள் அரசாங்கத்தைக் கேட்டு வந்தபோதிலும் பல்வேறு காரணங்களைக் கூறி அரசாங்கம் தாதிமாரை நியமிக்காதிருந்தது. இவ்வாஸ்பத்திரியில் தினம் சராசரி 600 நோயாளர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிகிறது.

## "கடனை மீட்பதில்தான் கவனம் செலுத்துகிறார்கள் விவசாயிகள் நலனில் அக்கறைகாட்டவில்லை'

### ஆட்சிமன்றத்தில் வவுனியா எம். பி.

கொழும்பு, திங்கள்

"விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை எப்படியும் திருப்பிப் பெறவேண்டுமென்பதில்தான் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகிறதேயொழிய விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை" என்று வவுனியா எம்.பி திரு. தா. சிவசிதம்பரம் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் சபை குழு நிலையில் உணவு விவசாய அமைச்சின் செலவினங்களை ஷரத்து வாரியாக பரிசீலனை செய்தது.

வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் விவசாய இலாகாவில் குறைகள், குற்றங்கள் நிறைய இருந்தபோதிலும் வவுனியா, மன்னார் மற்றும் மாவட்டங்களின் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது. விவசாயிகளுக்கு உதவியும் ஊக்கமும் சரியாக அளிக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டதற்கு முக்கிய காரணம் தரகர் விவசாயிகளிடம் வட்டி என்னும் பெயரால் கொள்ளையடிக்காமல் தடுப்பதுதான். இப்போது விவசாயிகளுக்குக் கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவதற்காக பத்து ஏக்கர் செய்யும் விவசாயியையும் அரை ஏக்கர் செய்யும் விவசாயியையும் விவசாய அமைச்சு ஒன்றாகக் கருதி தொந்தரவு செய்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களிலும் ஊழலும் மோசமும் நிலவுகிறது. வவுனியா, மன்னார் மற்றும் வடபகுதியிலுள்ள மாவட்டங்களிலுள்ள டிராக்டர் பிரிவுகளால் விவசாயிகள் அதிகபலன் பெறமுடியாமலிருக்கிறது.

சின்ன வெங்காயத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை நீக்கவேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரம் கேட்டுக் கொண்டார்.

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

நல்லூர், திங்கள்

தெல்லிப்பளையில் பொல்லடிக் காயங்களுக்குள்ளான ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இன்றுமாலை 8-45 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி [illegible] பொலிசார் விசாரணை நடாத்துகின்றனர்.

தெல்லிப்பழை கட்டுவனைச் சேர்ந்த எம். சந்திரன் என்பவரே காயங்களுடன் வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

## திருட்டு

நல்லூர், திங்கள்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகம்மா தம்பு என்ற மூதாட்டி தனது வீட்டிலுள்ள குசினிக்குள் இருந்த பொழுது யாரோ இனந்தெரியாத இருவர் வீட்டிற்குள் புகுந்து தங்கச்சங்கிலி, ரொக்கப்பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்று விட்டனராம். இது சம்பந்தமாக விசாரணை செய்த சங்கானைப் பொலிஸ் சார்ஜன்ட் சந்தேகத்தின் பேரில் இருவரை தேடி வருகிறார்.

#### அரசாங்க அதிபர் மாநகரசபையை கோருகிறார்

# "முதல் திகதிக்குள் காணியை ஒப்படைக்க வேண்டும்"

நல்லூர், திங்கள்

ஒக்டோபர் மாதம் முதல் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான மின்சாரநிலையக் காணியை பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைநிலையம் அமைப்பதற்கு தம்மிடம் ஒப்படைக்கவேண்டுமென யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளரை, யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் கேட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை விஸ்தரிக்கவும் இப்போதுள்ள வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்துக்குப் பதிலாக சகலவசதிகளும் கொண்ட புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் தீர்மானித்திருந்தது. ஆஸ்பத்திரிக்கு மேற்குப் பக்கமாக உள்ள மின்சாரநிலையக் காணியின் ஒரு பகுதியையும் இடையேயுள்ள வீதியையும் சேர்த்து அந்த நிலத்தில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. இதற்கென இந்தக் காணியை தரும்படி மாநகர சபையிடம் கேட்டபோது மாநகர சபையினர் மறுத்து விட்டனர்.

இப்பொழுது சுகாதாரப் பகுதியினருக்கென மாநகர சபைக்குச் சொந்தமான இந்தக் காணியை, காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கும்படி காணி அமைச்சு அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது. அந்தக் காணியை ஒக்டோபர் முதல் திகதி தம்மிடம் ஒப்படைக்கும்படி உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளருக்கு தெரிவித்துள்ளார்.

## கலீல்

லெபனான் தேசத்துப் பெருங்கவிஞர் கலீல் ஜிப்ரான் எழுதிய குறுநாவல் ஒன்றை பிரபல எழுத்தாளர் 'உமாகாந்தன்' தமிழிலே உருவாக்கியுள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உற்சாகத்தையளிக்கும் இக்கதையைவிரைவில் 'ஈழநாடு' வாசகர்கள் சுவைத்துப் படிக்கலாம்.

## பாரதிவிழா

உடுப்பிட்டி, செவ்

தெல்லருணை ஆதனர் இளைஞர் மன்றம் நாளை மாலை 6 மணிக்கு பாரதி விழாவை செல்வன் தோட்டத்தில் நடத்துகிறது. [illegible] இடம்பெறும்.

## 1-ம எதிரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வால் வெட்டிச் சிறு காயம் விளைவித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜெ. பி. ஏ. செருபிம் 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகனும் புரக்டர் வேலும் மயிலும் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

இலங்கைத்தீவை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தா[illegible] கோவில் வீதி 68-ம் [illegible] அன்னை அச்சகத்தில் [illegible] செப்டம்பர் மாதம் 10-ம் திகதி [illegible] பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org